# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,606 — 1958 දෙසැම්බර් 1 වැනි සඳුද — 1.12.1958**

11,606 ம் **இலக்கம்** — **1958** ம் ஆண்டு மார்கழி **மாதம்** 1 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

L. D.—B. 16/58.

### 1950 ம் ஆண்டின் 43 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டம்

1956 ம் ஆண்டின் 25 ம் இலக்க 1957 ம் ஆண்டின் 14 ம் இலக்க, 1957 ம் ஆண்டின் 62 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்ட 1950 ம் ஆண்டின் 43 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டத்தின் 10 ம் பிரிவின் (5) ம் உபபிரிவோடு வாசிக்குங்கால், (2) ம் உபபிரிவின் பிரகாரம்; தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரி தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பிறப்பித்துள்ள கட்டளை.

ஆர். எம். ஜி: மணிப்பெனி,
தொழில், வீடமைப்பு, சமூகசேவை
மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1958 ம் ஆம் நவம்பர் மீ 7 ந் உ.

**கட்டளை**

இலங்கைத் தோட்ட முதலாளிகள் சம்மேளனத்திற்கும் இலங்கைத் தோட்ட ஊழியர் சங்கத்திற்குமிடையே செய்து கொள்ளப்பட்டு, 1958 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ந் திகதி வெளிவந்த 11,291 ம் இலக்க கஸெற்றில், " 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க கூட்டு உடன்படிக்கை " யென்ற தலைப்பின் கீழ் பிரசுரமான கூட்டுடன்படிக்கைக்குக் கட்டுப்படாதவரும், இலங்கையில் தேயிலையும் ரப்பரும் வளர்த்தலும், பதப்படுத்தலும் தொடர்பாய தொழில்களில்—

(1) 100 ஏக்கருக்குட்படாத இடப்பரபையுடைய தேயிலைத் தோட்டமெதிலும், அல்லது

(2) 200 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய ரப்பர்த் தோட்டமெதிலும், அல்லது

(3) தேயிலையும் ரப்பரும் பயிரிடப்படும் 150 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய தோட்டமெதிலும்,

தொழிலாளரை வேலைக்கமர்த்துபவருமான முதலாளி ஒவ்வொருவரும்—

(அ) அவ்வுடன்படிக்கையின் (8) ம் நிபந்தனை வாசகத்திலும், 1 முதல் 11 வரையுள்ள (இவையிரண்டு முட்பட்ட) நிபந்தனை வாசகங்களிலும், அவ்வுடன் படிக்கையினகத்தேயுள்ள அட்டவணையில் (அதன் (அ) ம் உபநிபந்தனை வாசகத்தில், தேயிலைத் தோட்டங்களிலும் ரப்பர்த் தோட்டங்களிலும் தலைமை விகிதருக்குச் சம்பளத்திட்டங்களை விதிப்பதற்குக் கூட்டுச் சபைக்குள்ள அதிகாரங்கள் பற்றிய பகுதி நீங்கலாக) 13 ம் நிபந்தனை வாசகத்திலும் குறிக்கப்பட்ட நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும், அல்லது

(ஆ) மேற்கூறிய நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விடக்குறையாத அளவு அனுகூலமான நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் அனுசரித்தல் வேண்டும்.

---

L. D.—B. 16/58.

### 1950 ம் ஆண்டின் 43 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டம்

1956 ம் ஆண்டின் 25 ம் இலக்க, 1957 ம் ஆண்டின் 14 ம் இலக்க, 1957 ம் ஆண்டின் 62 ம் இலக்க, தொழிற் பிணக்குச் சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்ட 1950 ம் ஆண்டின் 43 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டத்தின் 10 ம் பிரிவின் (5)ம் உபபிரிவோடு வாசிக்குங்கால, (2) ம் உபபிரிவின் பிரகாரம், தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரி தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பிறப்பித்துள்ள கட்டளை.

ஆர். எம். ஜி. மணிப்பெனி,
தொழில், வீடமைப்பு, சமூகசேவை
மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1958 ம் ஆம் நவம்பர் மீ 7 ந் உ.

கட்டளை

இலங்கைத் தோட்ட முதலாளிகள் சம்மேளனத்திற்கும் இலங்கைத்தோட்ட ஊழியர் சங்கத்திற்குமிடையே செய்து கொள்ளப்பட்டு, 1958 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ந் தேதி வெளிவந்த 11,291 ம் இலக்க கஸெற்றில், " 1958 ம் ஆண்டின் 2 ம் இலக்கக் கூட்டு உடன்படிக்கை " யென்ற தலைப்பின் கீழ் பிரசுரமான கூட்டுடன்படிக்கைக்குக் கட்டுப்படாதவரும், இலங்கையில் தேயிலையும் ரப்பரும் வளர்த்தலும், பதப்படுத்தலும் தொடர்பாய தொழில்களில்—

(1) 100 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய தேயிலைத் தோட்டமெதிலும், அல்லது

(2) 200 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய ரப்பர்த் தோட்டமெதிலும், அல்லது

(3) தேயிலையும் ரப்பரும் பயிரிடப்படும் 150 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய தோட்டமெதிலும்,

தொழிலாளரை வேலைக்கமர்த்துபவருமான முதலாளி ஒவ்வொருவரும்—

(அ) அவ்வுடன்படிக்கையின் (8) ம் நிபந்தனை வாசகத்திலும், 1 முதல் 11 வரையுள்ள (இவையிரண்டுமுட்பட்ட) நிபந்தனை வாசகங்களிலும்' அவ்வுடன்படிக்கையினகத்தேயுள்ள அட்டவணையின் 13 ம் நிபந்தனை வாசகத்திலும் குறிக்கப்பட்ட நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும், அல்லது

(ஆ) மேற்கூறிய நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விடக்குறையாத அளவு அனுகூலமான நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும்,

அனுசரித்தல் வேண்டும்.

---

L.D.—B. 16/58.

## 1950 ம் ஆண்டின் 43 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டம்

1956 ம் ஆண்டின் 25 ம் இலக்க, 1957 ம் ஆண்டின் 14 ம் இலக்க, 1957 ம் ஆண்டின் 62 ம் இலக்க, தொழிற் பிணக்குச் சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்ட 1950 ம் ஆண்டின் 43 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டத்தின் 10 ம் பிரிவின் (5) ம் உபபிரிவோடு வாசிக்குங்கால், (2) ம் உபபிரிவின் பிரகாரம், தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரி தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பிறப்பித்துள்ள கட்டளை.

ஆர். எம். ஜீ. மணிப்பெனி,
தொழில், வீடமைப்பு, சமூகசேவை
மந்திரி காரியாயல நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மீ 7 ந் வ.

கட்டளை

இலங்கைத் தோட்ட முதலாளிகள் சம்மேளனத்திற்கும் இலங்கைத் தோட்ட ஊழியர் சங்கத்திற்குமிடையே செய்து கொள்ளப்பட்டு, 1958 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ந் திகதி வெளிவந்த 11,291 ம் இலக்க கஸெற்றில், " 1958 ம் ஆண்டின் 3 ம் இலக்க கூட்டு உடன்படிக்கை " யென்ற தலைப்பின்கீழ் பிரசுரமான கூட்டுடன்படிக்கைக்குக் கட்டுப்படாதவரும், இலங்கையில் தேயிலையும் ரப்பரும் வளர்த்தலும், பதப்படுத்தலும் தொடர்பாய தொழில்களில்—

(1) 100 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய தேயிலைத் தோட்டமெதிலும், அல்லது

(2) 200 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய ரப்பர்த் தோட்டமெதிலும், அல்லது

(3) தேயிலையும் ரப்பரும் பயிரிடப்படும் 150 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய தோட்டமெதிலும்,

தொழிலாளரை வேலைக்கமர்த்துபவருமான முதலாளி ஒவ்வொருவரும்—

(அ) அவ்வுடன்படிக்கையின் (8) ம் நிபந்தனை வாசகத்திலும், 1 முதல் 11 வரையுள்ள (இவையிரண்டுமுட்பட்ட) நிபந்தனை வாசகங்களிலும் அவ்வுடன்படிக்கையினகத்தேயுள்ள அட்டவணையின் 13 (ஆ) ம் நிபந்தனை வாசகத்திலும் குறிக்கப்பட்ட நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் ; அல்லது

(ஆ) மேற்கூறிய நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விடக்குறையாத அளவு அனுகூலமான நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும்,

அனுசரித்தல் வேண்டும்.

---

L.D.—B. 16/58.

## 1950 ம் ஆண்டின் 43 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டம்

1956 ம் ஆண்டின் 25 ம் இலக்க, 1957 ம் ஆண்டின் 14 ம் இலக்க, 1957 ம் ஆண்டின் 62 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்ட 1950 ம் ஆண்டின் 43 ம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டத்தின் 10 ம் பிரிவின் (5) ம் உபபிரிவோடு வாசிக்குங்கால், (2) ம் உபபிரிவின் பிரகாரம், தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரி தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பிறப்பித்துள்ள கட்டளை.

ஆர். எம். ஜீ. மணிப்பெனி,
தொழில், வீடமைப்பு, சமூகசேவை
மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மீ 7 ந் வ.

கட்டளை

இலங்கைத் தோட்ட முதலாளிகள் சம்மேளனத்திற்கும் இலங்கைத் தோட்ட ஊழியர் சங்கத்திற்குமிடையே செய்து கொள்ளப்பட்டு, 1958 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ந் தேதி வெளிவந்த 11,291 ம் இலக்க கஸெற்றில், " 1958 ம் ஆண்டின் 4 ம் இலக்க கூட்டு உடன்படிகை " யென்ற தலைப்பின் கீழ் பிரசுரமான கூட்டுடன்படிக்கைக்குக் கட்டுப்படாதவரும், இலங்கையில் தேயிலையும் ரப்பரும் வளர்த்தலும், பதப்படுத்தலும் தொடர்பாய தொழில்களில்—

(1) 100 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய தேயிலைத் தோட்டமெதிலும், அல்லது

(2) 200 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய ரப்பர்த் தோட்டமெதிலும், அல்லது

(3) தேயிலையும் ரப்பரும் பயிரிடப்படும் 150 ஏக்கருக்குட்படாத இடப்பரப்பையுடைய தோட்டமெதிலும்,

தொழிலாளரை வேலைக்கமர்த்துபவருமான முதலாளி ஒவ்வொருவரும்—

(அ) அவ்வுடன்படிக்கையின் (7) ம் நிபந்தனை வாசகத்திலும், (அதன் (அ) ம் உபநிபந்தனை வாசகத்தில், தோட்டங்களில் (அங்கீகரிக்கப்படாத) மருந்து கலப்போருக்கும், வைத்திய ஊழியருக்கும் சம்பளத்திட்டங்களை விதிப்பதற்குக் கூட்டுச் சபைக்குள்ள அதிகாரங்கள் பற்றிய பகுதி நீங்கலாக) 1 ம் நிபந்தனை வாசகத்திலும், அவ்வுடன்படிக்கையினகத்தேயுள்ள அட்டவணையில் 2 முதல் 11 வரையுள்ள (இவையிரண்டு முட்பட்ட) நிபந்தனை வாசகங்களிலும் குறிக்கப்பட்ட நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் ; அல்லது

(ஆ) மேற்கூறிய நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விடக்குறையாத அளவு அனுகூலமான நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும்,

அனுசரித்தல் வேண்டும்.

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.